7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்முடிவு (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2011) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:*

2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2011)[@] "ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசப்போகிறீர்களா? தற்போது நேரம் 2–13 மணி. சட்டமுன்வடிவுமீது மாண்புமிகு உறுப்பினர்கள் எவரேனும் கருத்து கூற விரும்பினால், சுருக்கமாக ஓரிரு நிமிடத்திற்குமேல் எடுத்துக்கொள்ளாதீர்கள். அப்புறம் எல்லோருடைய சாபத்திற்கும் ஆளாகிவிடுவீர்கள். (சிரிப்பு)*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்–விவசாயிகள் சட்டத்தினை நீக்குவதற்கான சட்டமுன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலே சொல்லக்கூடிய விளக்கம் என்னவென்று சொன்னால், நிவாரணத் தொகைகளையெல்லாம் உயர்த்தி அறிவிக்க வேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டத்தை அடிக்கடி திருத்த வேண்டியிருக்கிற காரணத்தினாலே, இந்தச் சட்டத்தை நீக்குவது தேவைப்படுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத்தினுடைய பிரிவு 20, அரசு அறிவிக்கை*

[@] . . . ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

வாயிலாக இணைப்புப் பட்டியலில் உள்ள எதனையும் சேர்க்கவோ அல்லது அதை மாற்றவோ செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிற காரணத்தினால், தேவையான மாற்றங்களை அரசு அறிவிக்கையின்மூலமாகவே அவ்வப்போது நிறைவேற்றிக் கொள்ளலாம். அரசு அறிவிக்கையின் மூலமாக இந்த நிவாரணத்தை உயர்த்த முன்வருவதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது நல்லது; வரவேற்கத்தக்கது. ஆகவே, என்னுடைய கோரிக்கையெல்லாம், ஒரு சட்டமாக இருக்கிறபோது அது மக்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். திட்டமாக அது அறிவிக்கப்படுகிறபோது, அதை எந்த அரசு வேண்டுமானாலும் தூக்கிக் கிடப்பிலே போட்டுவிடலாம். ஆகவே, கடந்த அரசு ஏதோ சட்டத்தைக் கொண்டுவந்ததாகவும், இந்த அரசு அதை நீக்கிவிட்டு ஒரு திட்டத்தைக் கொண்டுவந்ததாகவும் ஒரு சங்கடமான நிலைமையை ஏற்படுத்த வேண்டியதில்லை.

பிற்பகல் 2–15

தேவையானால் இந்தத் திட்டங்களையெல்லாம் சேர்த்து அறிவிக்கின்ற முறையிலே ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தினால்கூட பரவாயில்லை, அந்த வகையிலே இந்தச் சட்டத்தை நீக்குவது வேண்டாம். இதற்கான சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே எதிர்க்கிறோம் என்பதை இந்த நேரத்திலே பதிவுசெய்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களே:

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்கக் கோருகின்ற இந்தச் சட்டமுன்வடிவு குறித்து புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஏற்கெனவே பிற உறுப்பினர்கள் சொன்னதுபோல, விவசாயத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்கெனவே இருக்கக்கூடிய இந்தச் சட்டத்தின்மூலம் போதிய பாதுகாப்பு இல்லை என்று சொன்னால், அதிலே திருத்தம் கொண்டுவரலாம். இருந்தாலும்கூட, அதை முற்றிலுமாக நீக்குவது ஏற்புடையதாகாது. ஒருவேளை, அப்படி

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 ஆகஸ்ட் 19

இந்தச் சட்டம் முற்றிலுமாக விலக்கப்படும்பொழுது, இதைவிட ஒரு வலுவான சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி, குறிப்பாக, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மிக முக்கியமான நேரங்களில் தங்களுக்குண்டான நிவாரணங்களைப் பெறுகின்றபொழுது, பல துறைகளுக்கு அலையவிடுகின்ற போக்குகள் தடுக்கப்படவேண்டும். அந்தக் கருத்திலே உடன்படுகிறேன்.

எனவே, வேறொரு சட்டம் கொண்டுவரப்படவேண்டுமென்ற கருத்தை, இன்னும் சொல்லப்போனால், முழு பாதுகாப்புடன் சட்டம் கொண்டுவரப்படுமேயானால், அந்த அடிப்படையில் வேண்டுமென்றால் இதை நீக்குவதற்கு ஏற்றுக்கொள்ளலாம். இருந்தாலும்கூட இந்தச் சட்டத்திலேயே கூடுதலாகத் திருத்தங்கள் கொண்டுவருவதும் ஏற்புடையதே என்பதை வலியுறுத்தி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி. (குறுக்கீடு) இதற்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று அவசியம் இல்லை. அந்த நேரத்திலே எதிர்க்கவில்லையென்றாலும், இது குறித்து பேசலாம்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவை முன்வைத்திருக்கிறீர்கள். அந்தச் சட்டத்தில் விவசாயிகளுக்கான பல பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் திருத்தங்கள் கொண்டுவரலாம் அல்லது நீக்கும்பட்சத்தில் அதற்கு மாற்றுச் சட்டம் கொண்டுவந்து—விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் வேறு மாற்றுச் சட்டங்கள் கொண்டுவந்து—வலுப்படுத்தவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் கடைக்கோடியில் வாழ்ந்துவரும் ஒரு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுடைய நலன் காக்கின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது அளப்பரிய நம்பிக்கை வைத்துள்ள விவசாயத் தொழிலாளர்கள், அம்மா அவர்களின் தேர்தல் அறிக்கையிலும், அதன்பின் நடைபெற்ற, முதல்வராகப் பொறுப்பேற்ற உடனேயே கையெழுத்திட்ட ஏழு நலத்

திட்டங்களிலும் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலும்கூட பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் கடந்த ஆட்சியில் பல்வேறு முறைகேடுகளுடன் நடைபெற்ற விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் சில தவறுகள் நடந்திருக்கின்றன. அதற்காக விவசாயத் தொழிலாளர்களுடைய அந்த வாரியத்தை இரத்து செய்கின்ற முறையிலே இருக்கக்கூடாது. அதற்குப் பதிலாக, இந்த அரசுமீது முழு நம்பிக்கை வைத்துள்ள விவசாயிகள் நல வாரியத்தை இரத்து செய்து அரசு கொண்டுவந்துள்ள சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற்று, கடந்த ஆட்சியில் நியமிக்கப்பட்ட வாரிய உறுப்பினர்களைப் பதவி விலகச் செய்துவிட்டு, சட்டரீதியாகச் செயல்படுகின்ற வகையிலே நலத் திட்ட உதவிகள் கிடைத்திடும் வகையில் அனைவருக்கும் வாரிய அட்டை வழங்கி, 18 வயது முதல் 60 வயது வரையுள்ள அனைவருக்கும்—கடந்த ஆட்சியில் குடும்பத்தில் ஒருவருக்கு மட்டும்தான் அடையாள அட்டை வழங்கப்பட்டது—அதைப்போக்கி, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: 18 வயதுக்குமேல் 60 வயது வரையுள்ளவர்களுக்கு அடையாள அட்டை வழங்கி, புதிதாக அமைக்கப்படும் வாரியத்தில் விவசாயத் தொழிலாளர்களுடைய நல வாரிய பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். கடந்த ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வாரியத்தில் குறைகள் இருக்கின்றன. ஒரு குடும்பத் தலைவர் இறந்தால் மூன்று நாட்களுக்குள் postmortem report சம்பந்தப்பட்ட வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று இருக்கின்றது. இறப்பு நேரும்போது அதுபோன்ற நடைமுறைகள் சாத்தியமில்லை. அதுபோன்ற குறைகளை நீக்கிவிட்டு கண்டிப்பாக இந்த நல வாரியத்தைச் செயல்படுத்த வேண்டும். இரத்துச் செய்வதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

பிற்பகல் 2—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டு

[திரு. பி. தங்கமணி] [2011 ஆகஸ்ட் 19

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக, சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களெல்லாம் நலன் பெறுகின்ற வகையிலே ஓர் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தத் திட்டமெல்லாம் கொண்டு வந்தார்களோ, அந்தத் திட்டத்தையெல்லாம் சட்டம் போட்டு, திட்டம் போட்டு மூடிவிடுகின்றார்கள் என்பதற்கு இந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் ஓர் உதாரணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு சுகாதார வளாகம் என்பதே, பெண்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற அந்தத் திட்டத்தையே மூடிவிட்ட தி.மு.க. அரசு, இப்படியொரு அருமையான திட்டத்தை விடுவார்களா என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அதானால்தான் அந்தத் திட்டத்தையே மூடிவிட்டார்கள். நீங்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டத்தின் வாயிலாக ஒரு வாரியத்தை அமைத்தார்கள். அந்த வாரியத்தாலே யாருக்கு என்ன பலன்? அந்த வாரியத்திலே தலைவராக இருக்கின்றார்கள், துணைத் தலைவராக இருக்கின்றார்கள் மற்றும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அதிலே உறுப்பினர்களாக முயன்றவர்கள் அதிலே பணம் பெறுகின்றவர்கள் அங்கே மனு கொடுக்க வேண்டும். அந்த மனுக்களை வருவாய்த் துறைதான் ஆய்வு செய்து அதற்குண்டான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். மீண்டும் ஆணைகள் பிறப்பித்ததற்குப் பின்னால் நல வாரியத்திற்குச் சென்று அவர்கள், அங்கேயும் பணத்திற்கு உண்டான ஆணையை மறுபடியும் பெற வேண்டுமென்ற நடைமுறைச் சிக்கல்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலேதான், மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தவொரு திட்டத்தைக் கொண்டுவந்தாலும், அந்தத் திட்டத்தின் வாயிலாகப் புதிதாக ஏதாவதொரு தொகையை உயர்த்த வேண்டுமென்றாலும்கூட, அதற்கு ஒரு சட்டத்தைப் போட வேண்டுமென்ற நிலைமை இருக்கின்றது.

இப்போது பட்ஜெட் செஷன் நடந்துகொண்டிருக்கின்றது. இந்த செஷன் முடிந்ததற்குப் பின்னால் நான்கு, ஐந்து மாத காலம்

2011 ஆகஸ்ட் 19] [திரு. பி. தங்கமணி]

இடைவெளி இருக்கும். ஏதாவதொரு நலத் திட்ட உதவி வழங்க வேண்டுமென்று சென்னால் அந்த ஐந்து மாத காலத்தில் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்ற நல்ல எண்ணத்திலேதான் இன்றையதினம் இந்தச் சட்டத்தை, உழவர் பாதுகாப்புத் திட்ட நீக்கச் சட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால் அந்த விவசாயத் தொழிலாளர்கள் சட்டம் என்பதன் அடிப்படையில் ஒரு போர்டை உருவாக்கி, ஒரு வாரியத்தை உருவாக்கி அரசுக்கு வீணான செலவு ஏற்படுத்தப்பட்டதே தவிர, வேறு எந்த விதத்திலும் அது அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இல்லை என்பதை நீங்கள் முதலிலேயே நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இங்கே மரியாதைக்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கொறடா அவர்கள் பேசுகின்றபோது அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், அதற்கொரு சட்டம் வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கே மாண்புமிகு அம்மா அவர்கள் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்பதை நீங்கள் முதலிலே நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் எந்த வகையில் பாதுகாப்பு இல்லை என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், அந்தத் திட்டத்திலே பார்த்தீர்களேயானால் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. பொன்னுப்பாண்டி அவர்கள் பேசுகின்றபோதுகூட இந்தத் திட்டத்திலே புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியவில்லை; குடும்பத் தலைவர் மட்டும்தான் அதிலே உறுப்பினராக இருக்க முடியுமென்று சொன்னார்கள். அதைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றியமைத்து, புதிய முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே அனைத்து உறுப்பினர்களும் பயன்பெறுகின்ற வகையிலே ஒரு திட்டத்தைக் கொண்டுவரவிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல, இன்றையதினம் தேசிய அடையாள அட்டை என்கின்ற திட்டத்தை இந்தியா முழுவதும் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்படி ஒவ்வொருவருக்கும் தனி அட்டையைக் கொடுக்கின்றபோதுதான் அந்த அடையாள அட்டையினுடைய நம்பரை அவர்களுக்குக் கொடுத்து, மற்ற

[திரு. பி. தங்கமணி] [2011 ஆகஸ்ட் 19

திட்டங்களிலும் அவர்களைச் சேர்க்க முடியும் என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். எந்த வகையிலும் இந்தத் திட்டத்தினால் ஏழை விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள். கடந்தகால ஆட்சியைவிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் அதிகப் பலனைப் பெறப் போகின்றார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தைப் பற்றி நீங்கள் சொல்கின்றீர்களே, அதிலே ஒரேயொரு உதாரணத்தை மட்டும் நான் சொல்கிறேன். 5 ஆண்டுக் காலம் அவர்கள் ஆட்சியிலே இருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டத்தைப் போட்டு 6 மாத காலம்தான் ஆட்சியிலே இருந்தார்கள். அந்த 6 மாத காலத்தில் பார்த்தீர்களேயானால் 66 இலட்சத்து 49 ஆயிரத்து 895 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 2 கோடியே 2 இலட்சத்து 73 ஆயிரத்து 879 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள். ஆனால், அந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் பார்த்தீர்களேயானால் 76 இலட்சத்து 45 ஆயிரத்து 856 குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து, அதில் மொத்த உறுப்பினர்களைப் பார்த்தீர்களேயானால் ஒரு கோடியே 74 இலட்சத்து 80 ஆயிரத்து 11 பேர்தான். அம்மா ஆட்சிக் காலத்தில் 6 மாத காலத்தில் 2 கோடியே 2 இலட்சம் பேர் மெம்பர்களாக ஆகியிருந்தார்கள். ஆனால், ஐந்தாண்டு காலம் தி.மு.க. ஆட்சி செய்து, அதைவிட குடும்பங்கள் அதிகமாகி, ஆனால் உறுப்பினர்கள் குறைவாக இருக்கின்றார்கள் என்று சொன்னால், எந்த விதத்திலே அந்த வாரியம் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் சொல்ல வேண்டுமென்பதைத்தான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக மொத்தத்தில், அந்த வாரியத்தைப் பொறுத்தவரை அவர்களுடைய கட்சிக்காரர்களையும், அவர்களுக்கு ஜால்ரா அடிக்கிறவர்களையும் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வாரியத்தை உருவாக்கினார்களேயொழிய, மக்களுக்கும், விவசாயிகளுக்கும் எந்த விதத்திலும் பலன் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெளிவாகச் சொல்லி, நீங்கள் கொண்டுவந்த அந்த எதிர்ப்புகளை வாபஸ் வாங்கி, ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3–ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 22–8–2011 திங்கட்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 22–8–2011 திங்கட்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

2011 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

22–8–2011 திங்கட்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 22–8–2011 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

28. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

29. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

30. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

31. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

32. 2009–2010ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

33. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

34. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய செயல்முறைத் திட்டம், 2011–2012. (தமிழ்)

35. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2011–2012. (தமிழ்)

36. மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)

37. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2011–2012. (தமிழ்)

38. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

39. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

40. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

* * * * *